தமிழ்நாடு அரசின் நிதி ரூ.16 இலட்சம் செலவில் கட்டப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய பூவிருந்தவல்லி சரக அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.15 கோடி மானியத் தொகையில் முதற்கட்டமாக 38 வக்ஃப் நிறுவனங்களுக்கு ரூ.9,77,61,401/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணை தொகை ரூ.4,88,80,701/-க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களின் முத்தவல்லிகளிடம் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., முதன்மை செயல் அலுவலர் அஃதாப் ரசூல்,ஜி.ஆர்.திருமலை, காஞ்சனா சுதாகர், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு உள்பட பலர் உள்ளனர்.

வக்ஃபு சட்டத்திருத்தம் :

முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் முதலில் எதிர்த்தார்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வஃபு வாரிய சரக அலுவலகம் திறப்பு நிகழ்ச்சியில் பேச்சு!

திருவள்ளூர் அக் 11;-

தமிழ்நாடு அரசு நிதியில் இருந்து கட்டப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய பூவிருந்தவல்லி சரக அலுவலக கட்டடம் திறப்பு விழா மற்றும் வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் மானியம் முதல் தவணை வழங்குதல் தமிழ்நாடு அரசின் நிதி ரூ.16 இலட்சம் செலவில் கட்டப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய பூவிருந்தவல்லி கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தை பயன்பாட்டிற்காக திறந்து

தமிழ்நாடு நிறுவனங்களுக்கு பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் 2025-2026ம் ஆண்டு வழங்கிய ரூ.15 கோடி மானியத் தொகையில் முதற்கட்ட மாக 38 வக்ஃப் நிறுவனங்க ளுக்கு ரூ.9,77,61,401/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணை தொகை 50% ரூ.4,88,80,701/-க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களின் முத்தவல்லிகளிடம் வழங்கி சிறப்புரையாற்றினர்

அப்போது பேசிய அமைச்சர்

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் பல்வேறு மதங்களை பின்பற்றுகிறவர்கள் ஒன்றாக வாழ்கிறார்கள். ஆனால் ஒன்றிய பா.ஜ.க அரசு சிறுபான்மையினருக்கு பல துன்பங்களை இழைத்து வருகிறது. அதையெல்லாம் தமிழ்நாடு எதிர்த்து வந்தது. அந்த வகையில் வக்ஃபு வாரிய சட்டத்திருத்தம் கொண்டு வந்த போதும், அதனை எதிர்த்து முதலில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான். என அமைச்சர் தெரிவித்தார்

இவ்விழாவில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகை உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் அஃதாப் ரசூல், திமுக நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் ஷாஜகான், முத்துவல்லி முஹம்மது ஹனீப் கௌஸ், பள்ளிவாசல் நிர்வாகிகள் ராஜா உசேன், ஷேக் பரீத், மாஹீன் அபுபக்கர், மஹபூப் பாஷா, ஈக்காடு முகமது ராஃபி, பூவிருந்தவல்லி நகர நிர்வாகிகள் எச். தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர் மன்னர், எஸ். அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா. புண்ணியங்கோட்டி, அன்பழகன், சௌந்தரராஜன், ஏ.ராஷீக், விமல் ஆனந்த், வார்டு செயலாளர் ஆனந்த் பாபு, வக்ஃப் நிறுவனங்களின் முத்தவல்லிகள் மற்றும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

அண்ணா - கலைஞர் எழுதிய புத்தகங்கள் குறித்த திறனாய்வு கவிதைப் போட்டி!

மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமை!

திருவாரூர், அக். 11 -

முதலவர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களது நல் வாழ்த்துக்களோடும், தலைமைக்கழக இலக்கிய அணி நிர்வாகிகளின் ஆலோசனைகளின்படியும், மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதல்களின்படி மாணவ - மாணவிகள் திராவிட இயக்கத்தின் தலைவர்களின் படைப்புகளை படித்து மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் மேலும் வளர்த்துக் கொண்டு, "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என்கிற திராவிடனாயகரின் முன்னெடுப்பை நிறைவேற்றிட, திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் கொரடாச்சேரி வீ.ஆர்.என். திருமணத்தில் மண்டபத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ - மாணவிகளுக்கான கவிதை எழுதும் போட்டி மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் எழுதிய புத்தகங்களிலிருந்து தலா ஐந்து புத்தகங்களை படித்து, அதுகுறித்த திறனாய்வு கவிதைகள் எழுத மாணவர்கள் மாணவிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மாவட்டம் முழுவதிலும் இருந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். போட்டிக்கு வந்திருந்த அனைவரையும் இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் புலவர் எண்கண் மணி வரவேற்றார்.

மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை, ஏற்று மாணவ மாணவிகளுக்கு கவிதை எழுதுவதற்கான உபகரணங்களை வழங்கி வாழ்த்தினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் தலைமை கழக பேச்சாளர்கள் சோம. இளங்கோவன், தியாக ராஜன் ,கவிஞர் உதயகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

போட்டியில் திருவாரூர் ஜி.ஆர்.எம் மேல்நிலைப் பள்ளி மாணவி ஸ்ரீப்ரியா முதலிடத்தையும் , விளக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி கனிமொழி இரண்டாமிடத்தையும் , திருத்துறைப்பூண்டி அந்தோணியர் மேல்நிலைப்பள்ளி மாணவி ப்ரியதர்ஷினி மூன்றாமிடத்தையும் பிடித்தனர். கொரடாச்சேரி மாதிரிப் பள்ளி மாணவர் சிறப்பு பரிசினை பெற்றார்.

கல்லூரி மாணவ - மாணவிகளில் சுவாமி தாயானந்தா கல்லூரி மாணவர் ஹாரிஸ் ஜெயராஜ் முதல் இடத்தையும், மத்திய பல்கலை கழக மாணவர் ரோஹித் இரண்டாம் இடத்தையும், திருத்துறைப்பூண்டி அரசுகல்லூரி மாணவி பிரியதர்ஷினி மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் பாராட்டு சான்றிதழ் கள் வழங்கப்பட்டது. இந்த மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பப்படுவர் .

ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், கேப்டன் செல்வராஜ், பேரூர் செயலாளர் பூண்டி கே. கலைவேந்தன் மற்றும் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ப.ஜாகிர் உசேன் , பால முத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட துணை அமைப்பாளர் நல்லாசிரியர் செல்லத்துரைநன்றி கூறினார். விழாவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ - மாணவியர்கள் பெற்றோர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர் .

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

கே.வி.குப்பத்தில் பொதுக்கூட்டம்!

வேலூர், அக்.11-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம்பேருந்துநிலையத்தில், வரும் 13.10.2025 மாலை 5.00 மணி அளவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கே.வி.குப்பம் முரசொலி தமிழ் மன்றம் சார்பில் நன்றி தெரிவிக்கும் விழா கூட்டம்நடைபெறுகிறது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர், (ம) முரசொலி தமிழ் மன்ற நிறுவனர் சி. கோபி தலைமை தாங்குகிறார்.

வெ. ஜெயராஜ், பி. கே.கருணாநிதி, எம்.உதய சூரியன், குப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்க, இரா.முரளி, நாராயணன் மு.பிரபு ஆகியோர் வரவேற்புரையாற்ற சா.பரிமளம் துவக்கி வைக்கிறார்.

சா.குமரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிட, தங்களான் திரைப்பட வசன ஆசிரியர், எழுத்தாளர் அழகிய பெரியவன், இவருடன் மாநில நாடகம் (ம) நாட்டுப் புற கலைகள் நல சங்க பொது செயலாளர் ஜே.சிவகுமார், இதன் மாவட்ட செயலாளர் புலவர். இராமகிருஷ்ணன் ஆகியோர் பாராட்டி பேசுகின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக கழக புரவலர் துரை சிங்காரம், கீ.வ.குப்பம் ஒன்றிய செயலாளர்கள் லோ.இரவிச்சந்திரன், கே. சீதாராமன்., இரா.முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர். சுந்தரவடிவேலு, கே.தயாளமூர்த்தி, வி.டி.சிவகுமார் மற்றும், வி.டி.ஜெயக்குமார், எம்.அசோக்குமார், இரா.தாமோதரம், பாரதி வெங்கடேசன், கவிதா சுதாசேகர், கோ. விஜயக்குமார், சு.மோகன்ராஜ், இரா. ரகசியன், சூரிய சுடர் வெங்கடேசன், வேல்முருகன் மற்றும் பலர் பேசுவார்கள்

எம்.முனிசாமி, ஜெ. விவேக், எம்.எஸ். திருஞானம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஈரோடு மத்திய மாவட்டம் பவானி தொகுதிக்குட்பட்ட வார்டு கிளை கழகங்களில் இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் புதிய பதவிக்கான படிவங்களை சரி பார்க்கும் பணி மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் ஆலோசனைப்படி மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் தலைமையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார் ஈரோடு மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் சன் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் ஈடுபட்டார்கள் உடன் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி,ஆர்.பிரவீன்குமார், ஹரிகரன், சிபி சக்கரவர்த்தி, கார்த்திக், கதிரவன் உள்பட பலர் உள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், முரசொலி நாளிதழ் ஆசிரியருமான, பெருமதிப்பிற்குரிய முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. முரசொலி வளாகத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செய்து வணங்கினார். இந்நிகழ்வின் போது சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், சட்டத்துறை துணைச் செயலாளர் என் மருது கணேஷ், சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் எம்.டி.மதன்ராஜ் ஆகியோரும் உடன் இருந்துமலர் தூவி வணங்கினர்.

5 வழித்தடம் மாற்றம் – 4 வழித்தடம் நீட்டிப்பு மற்றும்

சேலத்தில் மலைவழித்தடத்தில் 5 புதிய புறநகர் பேருந்துகள்!

அமைச்சர்கள் எ.வ.வேலு – இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தனர்!

சேலம், அக். 11-

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் மலைவழித்தடங்களில் 5 புதிய புறநகர் பேருந்துகள் மற்றும் 5 நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் 4 வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மலைவழித்தடங்களில் புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று (10.10.2025) சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றையதினம் மலைவழித்தடங்களில் தற்போது இயக்கப்பட்டு வரும் குறுஞ்சட்ட BS III புறநகர் பேருந்துகளுக்கு பதிலாக புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு, பெலாத்தூர் வழியாக செம்மநத்தம் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக பட்டிப்பாடி வேலூர் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக கொட்டச்சேடு வரையில் 2 பேருந்துகளும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கொல்லிமலை வரை ஒரு பேருந்தும் என மலைவழித்தடங்களில் 5 புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் அடிப்படையில் எடப்பாடியிலிருந்து சங்ககிரி வழியாக திருச்செங்கோடு வழியாக இயக்கப்பட்ட பேருந்து தற்போது ஜலகண்டாபுரத்திலிருந்து சித்திரபாளையம், சமுத்திரம், புதுப்பாளையம் வழியாக கொங்கணாபுரம் வரையிலும், சங்ககிரியிலிருந்து கன்னியாம்பட்டி வரை இயக்கப்பட்ட பேருந்து கன்னியாம்பட்டியலிருந்து புதுப்பாளையம், சமுத்திரம், சித்திரபாளையம் வழியாக ஜலகண்டாபுரம் வரையிலும், ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரை இயக்கப்பட்ட பேருந்து ஓமலூரிலிருந்து சடைமாரியம்மன் கோவில் வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரையிலும், ஆத்தூரிலிருந்து திம்மநாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வழியாக இயக்கப்பட்ட பேருந்து ஆத்தூரிலிருந்து அரசநத்தம், ஊராண்டிவளசு, திம்மநாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை வழியாக இயக்கப்பட்ட பேருந்து மேச்சேரியிலிருந்து மல்லியகுந்தம் பிரிவு, ஊஞ்சகரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரையிலும் என 5 வழித்தட மாற்றம் செய்யப்பட்ட பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஏற்காட்டிலிருந்து பட்டிபாடி வேலூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது பட்டிபாடி வேலூரிலிருந்து மலை வழித்தடம் வழியாக சொனப்பாடி வரையிலும், சேலம் நகரப்பேருந்து நிலையத்திலிருந்து உயிரியல் பூங்கா, செட்டிச்சாவடி வழியாக டேனிஷ் பேட்டை வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது டேனிஷ் பேட்டையிலிருந்து பெரிய வடகம்பட்டி வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை இயக்கப்பட்ட பேருந்து மேட்டூரிலிருந்து மேச்சேரி வரையிலும், மூலக்காட்டிலிருந்து மேச்சேரி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது மேச்சேரியிலிருந்து மல்லியகுந்தம் பிரிவு, ஊஞ்சக்கரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரை என 4 பேருந்து சேவைகள் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொதுமேலாளர் த.மோகன்குமார், முதுநிலை துணை மேலாளர் (மனித வள மேம்பாடு) க.ராஜராஜன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

தளபதி முருகேசன் தலைமை! வே.மருதவேல் – தென்றல் மணிமாறன்

பொள்ளாச்சி வடக்கு - கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி கூட்டம்!

இளைஞரணி பார்த்தசாரதி – ஆஜிப்கான் சிறப்புரை!

பொள்ளாச்சி, அக். 11 -

பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கிளை மற்றும் பாக இளைஞரணி நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வே.மருதவேல் ஏற்பாட்டில் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் மேற்பார்வையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பார்த்தசாரதி வரவேற்புரையில் நடைபெற்றது.

தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கி ஆய்வு மேற்கொண்டார். இதில் இளைஞர் அணி நிர்வாகிகள், கழகக் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உடன் தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார் , குச்சனூர் பிரசாத் , தேனி மாவட்ட ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் சீலையம்பட்டி நடராஜன், விஜயகுமார், கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு நிர்வாகிகளை தனித்தனியாக ஆய்வு மேற்கொண்டனர் ,

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் பணிக்கம்பட்டி முத்துசாமி, ஆட்சிபட்டி பாலகிருஷ்ணன், மெடிக்கல் பரமசிவம், மாவட்ட தொண்டரணி ஆட்சிபட்டி சுரேஷ், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் மோகன் வீரகுமார், மாவட்ட பிரதிநிதி நடராஜ் , ஒன்றிய பொருளாளர் நஞ்சப்பன் , சந்தேகவுண்டன்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சேரன்நகர் சுரேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பூரண சந்திரன், கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆட்சிபட்டி கார்த்திக், கோகுல், சபரீஷ்வரன், மோகன் பிரபு, சேதுபதி, உதயகுமார், பொள்ளாச்சி நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சபரிமுத்துவீரன், நவீன்குமார் , முகேஷ் பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டலத்திற்கு உட்பட்ட 55,வது வார்டு ஆல்வின் கார்டனில் டி.எப்.சி நிதியிலிருந்து 2,50 லட்சத்தில் புதிதாக நீர் தேக்கத் தொட்டி கட்டிடம் கட்டும் பணிக்கு தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா.எம்,எல்,ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி. காமராஜ் உடன் தெற்கு பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான பி.புகழேந்தி,எல்.பெரியநாயகம் பகுதி நிர்வாகிகளும்,மாநகர நிர்வாகிகளும் நல சங்க நிர்வாகிகளும் கழக தோழர்களும் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்